## இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை – 2017

-----------------------------------------------------------------------------------------------

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1969 இன் 36 ஆம் இலக்க கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 38(1) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்து பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------------

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் 2017 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01

நியமத்தின் 32 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு நியமம் மூலம் தேவைப்படுத்தப்படுகின்ற அல்லது அனுமதி வழங்கப்பட்டவைகள் தவிர சொத்துக்களும் பொறுப்புக்களும் ஒன்றுக்கொன்று ஈடுசெய்ய முடியாதிருந்தது. எனினும் ரோபோ தொழில்நுட்ப நிலையத்தை தாபிப்பதற்காக அமைச்சின் மூலம் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட ரூபா 60,000,000 மானியம் மற்றும் அப்பணத்தை செலவிட்டு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 57,195,219 தொகையான சொத்துக்கள் ஒன்றுக்கொன்று ஈடுசெய்யப்பட்டு ரூபா 2,804,781 தொகையான தேறிய மீதி மாத்திரம் நடைமுறையல்லா பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறையல்லாச் சொத்துக்கள் மற்றும் மூலதன மானியம் என்பன ரூபா 57,195,219 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### (ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 08

நியமத்தின் 42 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனமொன்றினால் போதியளவான முன்னைய காலப்பகுதியின் போது தவறுகள் ஏற்பட்ட காலப்பகுதிக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பீட்டு ரீதியான பெறுமதி மீண்டும் வெளியிடுதல் கடந்த காலரீதியில் சீரமைக்கப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் முன்னைய ஆண்டின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட மீதியில் சீராக்கப்பட்டு 2016 ஆம் ஆண்டின் ஒப்பீட்டு ரீதியாக பெறுமதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேலும் நியமத்தின் 49 ஆவது பந்தியின் பிரகாரம் முன்னைய காலப்பகுதியின் தவறுகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் தேவையானளவு வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16**

---

(i) நியமத்தின் 36 ஆம் பிரிவின் பிரகாரம் நிலையான சொத்து விடயமொன்றை மீள்மதிப்பீடு செய்யும் போது அந்த சொத்து வகுப்பு முழுதும் மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், காணி மற்றும் காணி அபிவிருத்தி மற்றும் கட்டிட மீள்மதிப்பீட்டின் போது முறையே ரூபா 39,163,047 தொகை மற்றும் ரூபா 155,469,122 தொகையான சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) இயந்திர உபகரணங்கள், அச்சிடல் இயந்திரங்கள், அலுவலக உபகரணம் மற்றும் கணனி மீள்மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 65,735,659 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், கிரயத்தின் அடிப்படையில் பெறுமானத்தேய்வு கணிப்பீடு செய்யப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டிற்குரிய பெறுமானத்தேய்வு ரூபா 881,401 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 18**

---

கோரப்பட்ட உற்பத்தியை மேற்கொண்டு கையளிக்கப்படாதிருக்கும் போது நியமத்தின் 14 ஆவது பிரிவிற்கு முரணாக விலைப்பட்டியல் பெறுமதி ரூபா 3,902,217 தொகையான உற்பத்தியில் மீளாய்வாண்டில் விற்பனையாக அதற்குரிய கிரயம் ரூபா 2,225,726 தொகை விற்பனைக் கிரயமாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**(உ) இலங்கை கணக்கீட்டு நியமம் 20**

---

அரசாங்கத்தின் மானியமாக பலவருட காலமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 1,964,238,178 தொகையான மூலதன மானிய மீதி நியமத்தின் 12 ஆம் பந்தியின் பிரகாரம் சீரான அடிப்படையில் பதிவழிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) இலங்கை கணக்கீட்டு நியமம் 39**

---

நியமத்தின் 46(அ) பிரிவின் பிரகாரம் சந்தை வட்டி விகிதத்திற்கு குறைவாக வழங்கப்பட்ட ஊழியர் கடன், நேர்கோட்டு வட்டி விகித முறைமை பயன்படுத்தப்பட்டு காலக்கழிவு கிரயத்தில் இனங்காணப்பட வேண்டியிருந்ததுடன் சந்தை வட்டி விகிதத்திற்கும் கடனுக்காக கிடைக்கின்ற வட்டி விகிதத்திற்கும் இடையே வேறுபாடு ஊழியர் கிரயமாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது 06 விசேட செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காகக் கிடைத்த ரூபா 30,600,174 தொகையான மீண்டெழும் மானியம் மற்றும் அந்த செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 36,365,951 தொகையான செலவினம் விரிவான வருமானக் கூற்றில் சீராக்கப்படாமல் மானிய கணக்கூடாக சீராக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஒப்பந்தத்திற்காக கொடுப்பனவு செய்யும் போது மீளாய்வாண்டில் குறைக்கப்பட்ட நிறுத்தி வைத்தல் பணம் ரூபா 3,062,748 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) புத்தள கைத்தொழில் பேட்டையின் உள்ளக வீதிகள், வடிகாண் முறைமை அமைத்தல் மற்றும் வேலி நிர்மாணம் என்பவற்றிற்கான ஒப்பந்தங்களுக்காக மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி ரூபா 1,644,239 தொகை நடைமுறை வேலையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) அனுராதபுரம் நேகம்பஹ கைத்தொழில் பேட்டையில் காணிகளைச் சுத்தப்படுத்துதல் மற்றும் வேலி நிர்மாணத்திற்கான ஒப்பந்தங்களுக்குரியதாக செலுத்த வேண்டிய செலவினமான ரூபா 993,089 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) முன்னைய ஆண்டிற்குரிய காலக்கழிவாக பிழையாக மீள் மதிப்பீட்டு ஒதுக்கத்தில் வரவு வைக்கப்பட்டிருந்த ரூபா 11,051,161 தொகை மீளாய்வாண்டின் போதும் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பல வருட காலமாக மானியமாகக் கிடைத்த இருப்பு விடயங்களின் பெறுமதி கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கைத்தொழில் பேட்டை பிரிவின் அறிக்கையின் பிரகாரம் 13 கைத்தொழில் வலயங்களில் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய மீதி ரூபா 15,277,733 ஆக இருந்த போதிலும், கணக்குப் பிரிவின் அறிக்கையின் பிரகாரம் அது ரூபா 36,150,400 ஆனமையால் ரூபா 20,872,667 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இருப்புப் பெறுமதி ரூபா 9,494,613 ஆக இருந்த போதிலும், பௌதீக மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் இருப்பு மீதி ரூபா 8,594,832 ஆனமையால் ரூபா 899,781 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய பெறுமதி சேர் வரி ரூபா 51,363,240 ஆக இருந்த போதிலும், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட பெறுமதி சேர் வரி அறிக்கையின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 29,408,699 ஆனமையால் ரூபா 21,954,541 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஏனைய பெறவேண்டிய சொத்தாக 2013 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளிலிருந்து கொண்டுவரப்படுகின்ற 04 மீதிகளின் கூட்டுமொத்தமான ரூபா 1,304,303 தொகையைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கைத்தொழில் பேட்டையிலும் கடன்பட்டோர்களிடமிருந்தும் கிடைக்க வேண்டிய ரூபா 45,448,707 தொகையான மீதியில் 05 வருடங்களை விஞ்சிய மீதி ரூபா 24,037,750 ஆக இருந்ததுடன் மொத்தமாகக் கிடைக்க வேண்டிய பெறுமதியில் 66 சதவீதம் அதாவது ரூபா 30,096,011 தொகை கைத்தொழில் வலயங்களிலிருந்து அறவிட வேண்டிய வாடகைப் பெறுமதியில் உள்ளடங்கியிருந்தது.

(இ) ஐந்து வருடங்களுக்கு முன்பிருந்து கொண்டு வரப்படுகின்ற ஊழியர் முற்பணம் ரூபா 928,370 தொகை தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) உடைந்த பொருட்களைக் கொள்வனவு வெய்வதற்காக 2009 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் செலுத்தப்பட்ட ரூபா 5,402,511 தொகையான முற்பணம் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கைத்தொழில் பேட்டையின் கைத்தொழிலாளர்களுக்கு 05 வருடங்களுக்கு முன்பிருந்து செலுத்த வேண்டியதாக காணப்பட்ட ரூபா 3,072,949 தொகையான கடன்கொடுத்தோர் மீதி உரிய கைத்தொழிலாளர்களை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2016 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளுக்குரிய ரூபா 2,761,479 தொகை மற்றும் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 3,303,517 தொகையான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரித்தொகை என்பன உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) 2016 ஆம் ஆண்டு முதல் செயற்திட்ட செலவினத்திற்காக வரிசை அமைச்சிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 3,731,167 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட 2012 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது மதிப்பிழந்த ரூபா 209,398 தொகையான காசோலை தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 189 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான சபையின் நிதி விளைவுகள் ரூபா 18,128,796 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் பற்றாக்குறை ரூபா 30,029,583 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 11,900,787 தொகையான அதிகரிப்பைக் காண்பித்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிர்வாகச் செலவினம் ரூபா 50,973,200 இனால் அதிகரித்திருந்த போதிலும், மொத்த இலாபம் ரூபா 64,515,423 இனால் அதிகரித்துச் சென்றமை நிதிவிளைவின் அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 84,728,727 தொகையான பற்றாக்குறை 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 27,259,111 தொகையான மிகை வரை அதிகரித்திருந்த போதிலும், மீண்டும் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது முறையே 30,029,583 மற்றும் ரூபா 18,128,796 தொகையான பற்றாக்குறை ஏற்பட்டிருந்தது. எனினும், நிதி விளைவில் ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை மீளச் சீராக்கும் போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 68,532,050 ஆகக் காணப்பட்ட பங்களிப்பு 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 213,500,294 வரை அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

2017 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச்சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் அது தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 4.1.2 செயற்படுநிலையும் மீளாய்வும்

(அ) சபையினால் 05 பிரதான பணி அடைவுக் குறிகாட்டிகள் (KPI) இனங்காணப்பட்டு அதற்குரிய செயற்பாடுகள் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், எதிர்பார்த்த இலக்குகள் அடையப்படாதிருந்தமை கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

(i) மீளாய்வாண்டில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான 400 கைத்தொழிலாளர்களின் வருமாத்தை அதிகரித்தல் மற்றும் 2000 வேலை வாய்ப்புச் சந்தர்ப்பங்களை உருவாக்குதல் என்பன எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், 187 கைத்தொழிலாளர்களினது மொத்த வருமானம் மாத்திரம் அதிகரித்திருந்ததுடன் 675 வேலை வாய்ப்புச் சந்தர்ப்பங்கள் மாத்திரம் உருவாகியிருந்தது.

(ii) வலயங்களில் கடைகள் அல்லது காணியை வாடகைக்கு வழங்குவதன் மூலம் 125 புதிய வியாபார நிலையங்களை ஏற்படுத்தி அதில் 500 வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், 29 வியாபார நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டு 444 வேலை வாய்ப்புச் சந்தர்ப்பங்கள் மாத்திரம் உருவாக்கப்பட்டிருந்தது. திட்டமிடப்பட்ட சகல வியாபார நிலையங்களும் ஆரம்பிக்கப்பட்டிருக்குமாயின் கணிசமான வேலை வாய்ப்புச் சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொள்ளக்கூடியதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) மீளாய்வாண்டில் 600 ஊழியர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 198 ஊழியர்களுக்கு மாத்திரம் பயிற்சி வழங்கப்பட்டிருந்தது.

(iv) வெளிநாட்டு சந்தைகளை அறிமுகப்படுத்தும் பணி அடைவு குறிகாட்டிகளின் கீழ் 100 கைத்தொழில்களில் 25 உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், 15 கைத்தொழில்களில் 12 உற்பத்திகள் மாத்திரம் வெளிநாட்டுச் சந்தைகளில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன.

(ஆ) இறப்பர் பொருள் அபிவிருத்தி மற்றும் சேவை நிலையத்தில் 2017 ஆம் ஆண்டிற்காக திட்டமிடப்பட்ட 11 செயற்பாடுகளுக்கிடையே 08 செயற்பாடுகளில் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு அடையப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பத்தேகம கைத்தொழில் பேட்டையில் அமைந்தள்ள காணிக்கான நில அளவை வரைபடத்தை தயாரித்தல் மற்றும் அளவை நடவடிக்கைகளுக்காக ரூபா 15,576 தொகையும், காணியைக் கைப்பற்றுவதற்காக முற்பணமாக ரூபா 500,000 தொகையும் 2007 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2018 யூலை 31 ஆந் திகதி வரையிலும் அந்தக் காணி கையேற்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது "Foundry Plant" என்ற பெயருடைய உபகரணத்தைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 16 மில்லியன் தொகையான மூலதன மானியம் கிடைத்திருந்த போதிலும், அந்த உபகரணங்களை இறக்குமதி செய்வதற்காக நாணயக் கடிதம் திறத்தல் மாத்திரம் 2018 செப்தெம்பர் 12 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) 2017 ஆம் ஆண்டில் நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டத்தின் 5 தடவைகளிலும் அறவிடப்படாதுள்ள கடன்பட்டோர் மீதி, ஊழியர் முற்பணத்தை அறவிடல் மற்றும் புத்தகங்களை நாளதுவரையாக்குதல் தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்த போதிலும், அந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இறப்பர் பொருள் அபிவிருத்தி மற்றும் சேவை நிலையத்தில் இறப்பர் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக நேரடியாகத் தேவைப்பட்ட 64 இயந்திரங்களில் 26 இயந்திரங்கள் பலவருட காலமாக செயலிழந்து காணப்பட்டது. மேலும், தரக்கட்டுப்பாட்டு ஆய்வுகூடத்திற்குச் (QC Lab) சொந்தமான பாவனைக்கு எடுக்க முடியாத நிலையில் செயலிழந்து 20 உபகரணங்கள் காணப்பட்டன.

(ஆ) 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 9,318,026 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட இறப்பர் இன்ஜெக்சன் மோல்டின் இயந்திரம் மூலம் இறப்பரை அண்மித்த உற்பத்திக் கைத்தொழில்களில் ஈடுபடுகின்ற 250 நலனாளிகளுக்கு தேவையாக பயிற்சிகளை வழங்குவதன் மூலம் கைத்தொழிலாளர்களுக்கு தமது உற்பத்திகளுக்குத் தேவையான மாதிரிகளைத் தயாரித்து வழங்குதல் நோக்கமாக இருந்தது. எனினும், 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது 17 பயிலுனர்கள் மாத்திரம் பயிற்றுவிக்கப்பட்டமை மற்றும் ஒரு நிறுவனத்திலிருந்து மாத்திரம் கட்டளை பெறப்பட்டு அதுவும் பரிசோதனை மட்டத்தில் காணப்பட்டமையின் காரணமாக மேற்கூறப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்ளுதல் பலவீனமான நிலையில் காணப்பட்டது.

(இ) கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தொழில் முயற்சியாளருக்கு பகிர்ந்தளிப்பதற்கு 2009 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 4,130,850 பெறமதியான இருப்புக்கள் 2018 செப்தெம்பர் 18 ஆந் திகதி வரையிலும் பகிர்ந்தளிக்கப்படவில்லை.

## 4.4 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 728 பதவிகளுக்கிடையே மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெற்றிடமாகக் காணப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 249 ஆக இருந்ததுடன், அதில் உள்ளடங்கியுள்ள உயர் முகாமைத்துவ மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட 12 பதவிகளில் 05 பதவிகளும் வெற்றிடமாகக் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. மேலும், 2014 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது அங்கீகரிக்கப்பட்ட 08 பதவிகளுக்காக 69 உத்தியோகத்தர்கள் ஒப்பந்த மற்றும் நாளாந்த கொடுப்பனவு அடிப்படையில் சேர்க்கப்பட்டு மாதாந்தம் ரூபா 2,236,324 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்படாத 04 ஆலோசனையாளர்கள் பதவிகளுக்காக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டு 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 4,152,023 தொகை படியாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டீஜீ/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரால் விநியோகிக்கப்பட்ட கடிதம் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் ஆண்டு ''2030 இன் நிகழ்ச்சி நிரல்'' இன் பிரகாரம் சகல அரசாங்க நிறுவனங்களாலும் செயற்பட வேண்டியிருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரியதாக சபையினால் தமது விடயப்பரப்பின் கீழ் கொண்டு வரப்பட்ட பணிகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டியுள்ளது என்பன தொடர்பாக அறிவிக்காமையின் காரணமாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்கை அடைந்து கொள்ள வேண்டிய முறைகள், இலக்குகள் என்பவற்றை அளவிடுவதற்கான குறிகாட்டிகளும் அறிமுகப்படுத்தப்படவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 6.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்குகள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 03 மாத கால தாமதத்தின் பின்னர் 2018 மே 21 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 6.2 பெறுகைகள்

2016/2017 காலப்பகுதிக்காக பாதுகாப்பு சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக 2016 மார்ச் 15 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட கேள்வி கோரலின் பிரகாரம் கேள்வி மதிப்பீட்டுக் குழுவினால் ஆகக் குறைந்த விலையுடன் 03 கேள்விகள் சிபாரிசு செய்யப்பட்டிருக்கும் போது எந்தவித காரணமும் இன்றி பெறுகைக் குழுவினால் அந்த கூறுவிலைகள் நிராகரிக்கப்பட்டு 2016 ஆகஸ்ட் 18 ஆந் திகதி மீண்டும் கேள்வி கோரப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இரண்டாவது தடவை கிடைத்த கேள்வி மதிப்பீட்டின் போது சிறு விலகலாக கவனத்தில் கொள்ளக்கூடிய கணக்கு அறிக்கை வழங்கப்படாமை போன்ற காரணங்கள் காண்பிக்கப்பட்டு 03 கேள்விகளும், சகல விபரங்களும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் போது அவை காணப்படாததாகக் கருதி மேலும் 10 கேள்விகளும் நிராகரிக்கப்பட்டு 19 ஆவது

விலையுடன் உள்ள கேள்வி வெற்றியீட்டிய கேள்வியாளராக மதிப்பீட்டுக் குழுவினால் சிபாரிசு செய்யப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாக இருந்தது. மேலும், அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் 02 மாத காலத்திற்கு மாத்திரம் சேவையினை வழங்கியிருந்ததுடன் அதற்குச் செலுத்தப்பட்ட விலை மற்றும் ஆரம்ப கேள்வி கோரல் விலையுடன் ஒப்பிடும் போது 02 மாதங்களுக்காக ரூபா 769,683 தொகை மேலதிகமாகச் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

### 6.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.4 ஆம் பிரிவின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பாதீடு அடுத்துவரும் ஆண்டின் 03 மாதங்களுக்கு முன்னர் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், சபையினால் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் அரசாங்கத்தின் பங்களிப்பு, நிறுவனத்தின் உழைப்பு மற்றும் ஒட்டுமொத்த செலவினங்களை உள்ளடக்கி வருடாந்த பாதீடு தயாரிக்கப்படாதிருந்ததுடன் திறைசேரி மானியங்களுக்கான செலவின மதிப்பீடு மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது.

### 6.4 ஆண்டறிக்கையை சபையில் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பந்தியின் பிரகாரம் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் ஆண்டறிக்கை 2018 யூலை மாதம் வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.5 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நவபிம களஞ்சிய தொகுதியில் (Yard) களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த 1,500 கிலோகிராம் ஆன உடைந்த இருப்புக்கள் பௌதீக மெய்மையாய்வு செய்யப்பட்டிருந்தும் அப்பெறுமதி தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பானளுவ கைத்தொழில் பேட்டையின் காணியைக் கைப்பற்றுவதற்காக 2016 செப்தெம்பர் மாதத்தின் போது அமைச்சிலிருந்து ரூபா 25 மில்லியன் கிடைத்திருந்த போதிலும், இந்த அறிக்கைத் திகதி வரையிலும் காணி கைப்பற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) நீண்ட காலமாக உரிமை கோரப்படுகின்ற பிரதான அலுவலகக் காணி உட்பட 10 மாவட்டங்களில் நடாத்தப்படுகின்ற பிரதேச அலுவலகங்கள் மற்றும் ஏனைய நிலையங்கள் நடாத்திச் செல்லப்படுகின்ற காணிகளை சட்டரீதியாக கையேற்க முடியாமையின் காரணமாக அந்த சொத்துக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் மீது விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) நிதிக் கட்டுப்பாடு | (i) வங்கி இணக்கங்கள் குறித்த திகதியில் சமர்ப்பிக்கப்படாமை |
| | (ii) பல்வேறு பிரிவுகளின் நிதிக்கொடுக்கல் வாங்கல்களுக்குரிய ஆவணங்கள் கணக்குப் பிரிவினால் செயற்திறனாக சேகரிக்கப்படாமை. |
| (ஆ) கடன்பட்டோர் கட்டுப்பாடு | (i) மீதி உறுதிப்படுத்தல் பெறப்படாமை. |
| | (ii) பதிவேடுகள் நாளதுவரையாக்கப்படாமை. |
| (இ) இருப்புக் கட்டுப்பாடு | (i) இருப்பு பதிவேடு நாளது வரையாக்கப்படாமை |
| | (ii) சேதமடைந்த இருப்புக்களை கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| | (iii) சில இருப்பு விடயங்கள் தொடர்பாக பேரேட்டுக்காட் மற்றும் பின்காட் மீதிகளுக்கிடையே அசாதாரண நிலை காணப்பட்டமை. |
| | (iv) விற்பனைப் பிரிவினால் ஒழுங்கு முறையாக புத்தகங்கள் பேணிச் செல்லப்படாமை மற்றும் பொருள் விநியோகித்தலின் போது பேணப்பட்ட இருப்பு தொடர்பாக சரியான மேற்பார்வை செய்யப்படாமை. |
| | (v) அதிக விலையான இருப்புக்கள் உரிய பிரகாரம் களஞ்சியப்படுத்தப்படாமை மற்றும் களஞ்சியத்தை சுற்றி பாதுகாப்பு ஏற்பாடுகள் ஈடுபடுத்தப்படாமை |
| (ஈ) பதிவேடுகளைப் பேணிச் செல்லல் | நட்ட இழப்பு பதிவேடு நாளதுவரையாக்கப்படாமை |